# ஆயிரம் துதிப்பாடல்

ஆயிரம் துதிப்பாடல் - எந்தன்
நாவினில் அசைந்தாடும்
ஆனந்தம் ஆனந்தம் என் மனதில்
ஆண்டவா உனைப்பாட – 4

**1**
வான்முகிலும் உயர் மலையும் உந்தன் புகழ் பாட
தேன் பொழியும் நறுமலர்கள் உந்தன் பெயர் பாட
வான் பொழியும் நீர்த்துளிகள் உந்தன் அருள் பாட
யான் உனது திருப்புகழைக் கவியால் நிதம்;பாட

(ஆண்டவா)

**2**
பகல் ஒளியும் பால் நிலவும் ஒளியாம் உனைப்பாட
அலைகடலும் அதன் சிறப்பும் கருணையை நிதம் பாட
மழலைகளின் தேன் மொழிகள் தாய்மையின் திறம் பாட
யான் உனது திருப் புகழைக் கவியால் நிதம் பாட

(ஆண்டவா)